ALPHA MIND POWER

# NEWSLETTER



JULY
2019

## *From Guruji's desk….*

My Dear Alpha Siddha,

Summer is almost over. At last we are able to see some rain. However, there is a lot of information that the temperatures are rising and every passing summer is becoming only hotter. Perhaps the Earth is undergoing some kind of transformation. We must meditate to make the Earth cooler and more suitable for us to live happily.

Now coming to the mind, we can see very clearly that the human mind is also undergoing a very distressing change. On one hand, spirituality is growing everywhere. On the other hand, killing for petty issues, robbery, chain snatching, rape and such things are also on the rise. Why is the human mind becoming so insensitive to the pain of others?

Some say, times are changing, it is kaliyuga and that is the reason. But, if we think about it, animals and other species are not changing like the human beings. So, that alone cannot be the reason. Then, what is making people resort to extreme measures without hesitation? The sight of blood used to make us tremble when we were kids. Today's kids have become insensitive to it.

I can think of only one reason for this galloping change that we are witnessing. The inputs that we are being fed are steadily creating wrong beliefs in the minds of people. This in turn is responsible for the change in behavior towards each other. Trust between even family members is disappearing altogether. This is the root cause of so many marriages breaking up.

I have been meeting various people who are worried about this trend. But, the highlight was something which I heard a few days back. A friend of mine was relating what happened in her cousin's house. They both were discussing about another distant cousin who was demanding dowry for her son's marriage. They were planning to talk to her and chide her for this behavior. Meanwhile, the seven year old daughter of the cousin, who was listening to this conversation, stepped in. She said 'Why should you question her behavior? If you don't like what she is doing, just mix some poison in the tea when she comes here and let her drink it. . Matter will be over'. Both the women were aghast.



This is the effect of the inputs we are receiving from the media today. We are witnessing too many murders committed for very petty reasons. These inputs are highlighted by every TV channel with explanation and graphics to show how the murders were committed. This is repeated over and over again. Then we have social media channels like Facebook etc. where again such inputs are highlighted and shown with supporting videos etc.

How else would a seven year old girl come up with such a bizarre solution? It is high time we think about what we are doing to ourselves with the inputs that are flooding us every hour, every day. We may not be able to stop anybody from flashing news. But we can certainly stop ourselves from watching it again and again.

We can stop our children from watching such news. We can choose what we watch, what we read. We can ensure that we give ourselves and our near and dear ones only such inputs which make us value life. Inputs which make us respect another human being, inputs which make us cherish relationships, inputs which make us feel love and kindness towards other human beings, inputs which improve our tolerance towards others… these are what we need urgently. Think about it…

The choice is yours. See good. Hear good. Speak good. Above all, think only good.

Blessings,

***Srimatha***



### Rishikesh Camp With Guruji!

**22.09.2019 to 02.10.2019**

**BADRINATH :** 23.09.2019 to 25.09.2019 (3 days)

**SHANTAGNI** : 27.09.2019 to 01.10.2019 (5days)
Reprogram your mind -
Residential Retreat at Ashram

You can attend either one or both the programs.

For further enquiries please contact AMP office: +919841272146

### FREE COUNSELING CAMP!

**Date: 13.07.2019, Saturday**
**Time: 10.00 am to 2 pm**
**Venue: AMP Office Saligramam, Chennai**

Spiritual Counselors trained by Guruji will do the counseling. Guruji will supervise.
Pl inform anyone who needs counseling to avail this rare opportunity. Registration is a must.

Phone: 9841402000, 9841272146
ALPHA MIND POWER, CHENNAI

என் அன்புள்ள ஆல்ஃபா சித்தரே,

வெய்யில் காலம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. ஒரு வழியாக கொஞ்சம் மழையும் பார்க்கிறோம். இருப்பினும் உலகெங்கும் வெப்பம் அதிகரித்து வருகிறது என்றும், வெய்யில் அதிக உஷ்ணமாக இருக்கிறது என்றும் செய்திகளை அதிகமாக பார்க்கிறோம். பூமியில் ஏதோ மாற்றங்கள் நடக்கின்றனவோ என்று தோன்றுகிறது. நாம் தியானம் செய்து பூமி சற்று குளிர்வாக நாம் வாழ்வதற்கு ஏதுவாக இருப்பது போல் பார்த்து வர வேண்டும்.

அடுத்து மனதை பற்றி பேசுவோம். மனித மனமும் ஒரு கவலை அளிக்கும் மாற்றத்தை சந்தித்து வருவதையும் நாம் பார்க்கிறோம். ஒரு பக்கம், ஆன்மீகம் அதிகமாக வளர்வதை பார்க்கிறோம். மறு பக்கம், மிகச் சிறிய விஷயங்களுக்கு கூட கொலை செய்வது, கொள்ளை, செயின் பறிப்பது, கற்பழிப்பு போன்ற பல விஷயங்களும் வளர்ந்து வருவதை பார்க்கிறோம். மனித மனம் ஏன் இப்படி மற்றவர்கள் வலிகளை புரிந்து கொள்ள முடியாத நிலைக்கு சென்று விட்டது?

சிலர் சொல்கிறார்கள், இது கலியுகம், காலம் மாறி விட்டது அது தான் காரணம் என்று. ஆனால் யோசித்துப் பார்த்தால் மிருகங்களும் மற்ற உயிரினங்களும் இப்படி மாறி விடவில்லையே. ஆக அது மட்டும் காரணமாக இருக்க முடியாது. அப்படி என்றால் மனிதர்களை இப்படிப்பட்ட செயல்களுக்கு தூண்டி விடுவது தான் எது?

நாம் குழந்தைகளாக இருந்தபொழுது இரத்தத்தை பார்த்தாலே நடுங்குவோம். இன்றைய குழந்தைகளுக்கு அது பழகிவிட்டது.

இந்த வேகமான மாற்றத்திற்கு ஒரு காரணம் மட்டுமே எனக்கு புலப்படுகிறது. நம் மீது திணிக்கப்படும் தகவல்கள் தவறான நம்பிக்கைகளை நமக்குள் ஏற்படுத்தி விடுகின்றன. இதன் காரணமாக மனிதர்களின் நடவடிக்கைகள் மாறிவிடுகின்றன. குடும்பத்தினர் இடையே ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறார்கள். இதுவே பல திருமணங்கள் உடைந்து போவதற்கு ஒரு முக்கிய காரணம். இந்த மாற்றத்தைப் பற்றி கவலை கொண்டிருக்கும் பலரை நான் சந்தித்து வருகிறேன். ஆனால் இவற்றிற்கு எல்லாம் முத்தாய்ப்பு வைப்பதாக அமைந்தது சில நாட்களுக்கு முன் நான் கேட்ட ஒரு விஷயம் தான். எனது ஒரு தோழி தனது உறவினர் வீட்டில் நடந்த ஒரு விஷயத்தைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். இவரும் அங்கிருந்த பெண்ணும் இன்னொரு உறவுக்கார பெண் தனது மகன் திருமணத்திற்கு வரதட்சிணை கேட்பதை பற்றி பேசிக் கொண்டிருந்தனர். அவரை கூப்பிட்டு கண்டிக்க வேண்டும் என்று இருவரும் பேசினர். அந்த சமயம் அந்த பெண்ணின் ஏழு வயது பெண் நடுவில் புகுந்தாள். அவள் சொன்னாள், ‘எதற்காக அந்த பெண்ணை நீங்கள் கேள்வி கேட்க வேண்டும்? அவர் செய்வது உங்களுக்கு பிடிக்காவிட்டால் அவர் இங்கு வரும்பொழுது டீயில் விஷம் கலந்து கொடுத்து சாப்பிட சொல்லுங்கள். விஷயம் முடிந்தது’. இந்த இரு பெண்களும் மிரண்டு போயினர்.

இது தான் மீடியா மூலமாக நாம் பெற்றுக் கொண்டிருக்கும் தகவல்களின் பாதிப்பு. மிகச் சிறிய விஷயங்களுக்கு கூட கொலைகள் செய்யப்படுவதை பல முறை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு டிவி சேனலும் இது போன்ற விஷயங்களை கிராஃபிக்ஸ் எல்லாம் போட்டு கொலை எப்படி நடந்தது என்பதையும் விளக்கி காட்டுகிறார்கள். இதை திரும்பத் திரும்ப காட்டுகிறார்கள்.

அது போலவே ஃபேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களிலும் இவ்விஷயங்கள் வீடியோக்கள் மூலமாக விளக்கங்களுடன் பரப்பப்படுகின்றன.

வேறு எப்படி ஒரு ஏழு வயது சிறுமியால் இப்படி ஒரு பயங்கரமான தீர்வைச் சொல்ல முடியும்? ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நாளும் நம் மீது திணிக்கப் படும் தகவல்கள் மூலம் நமக்குள் என்ன விளவுகள் ஏற்படுகின்றன என்பதை நாம் யோசித்தே ஆக வேண்டும். தகவல்கள் பரப்புவதிலிருந்து யாரையும் நம்மால் நிறுத்த முடியாமல் இருக்கலாம். ஆனால் அதைத் திரும்பத் திரும்ப பார்ப்பதிலிருந்து நம்மை நாம் நிச்சயம் நிறுத்திக் கொள்ளமுடியும்.

நமது குழந்தைகள் இது போன்ற செய்திகளைப் பார்ப்பதை நாம் நிறுத்தமுடியும். நாம் எதைப் பார்க்கிறோம் படிக்கிறோம் என்பதை நாம் தேர்வு செய்யமுடியும். நமக்கும் நம்மை சேர்ந்தவர்களுக்கும் வாழ்க்கையை மதிக்க செய்யும் தகவல்கள் மட்டுமே சேருமாறு பார்த்துக் கொள்ள முடியும். வாழ்க்கையை மதிக்கும் தகவல்கள் மட்டும் போதும். மற்ற மனிதர்களை மதிக்கும் தகவல்கள் போதும். உறவுகளைப் பேணும் தகவல்கள் போதும். நம் மனதில் மற்றவர்களிடம் அன்பையும் இரக்கத்தையும் வளர்க்கும் தகவல்கள் போதும். மற்றவர்களிடம் நமக்கு சகிப்புத் தன்மையை வளர்க்கும் தகவல்கள் போதும்..... இவை மட்டும் தான் நமக்கு மிக அவசரமாக தேவை. சிந்தியுங்கள்...

முடிவு உங்கள் கையில் தான்... நல்லதைப் பாருங்கள். நல்லதைக் கேளுங்கள். நல்லதைப் பேசுங்கள். எல்லாவற்றையும் விட நல்லதை மட்டுமே சிந்தியுங்கள்.

ஆசீர்வாதங்கள்,

ஸ்ரீபாகா

**குருஜியுடன் ரிஷிகேஷ் முகாம்!**

**22.09.2019 முதல் 02.10.2019**

**பத்ரிநாத்**: 23.09.2019 - 25.09.2019 ( 3 நாட்கள்)

**சாந்தக்னி**:27.09.2019 - 01.10.2019 ( 5 நாட்கள்)

மனதை தூய்மைபடுத்து - ஆசிரமத்தில் நடக்கும் வகுப்பு

நீங்கள் ஒன்று அல்லது இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : +919841272146

## இலவச கவுன்சிலிங் முகாம்!

**தேதி: 13.07.2019, சனிக்கிழமை, நேரம்: 10 am - 2 pm**
**இடம்: AMP அலுவலகம், சாலிகிராமம், சென்னை.**

குருஜியிடம் பயிற்சி பெற்ற ஸ்பிரிச்சுவல் கவுன்சிலர்கள் இதை செய்வார்கள்.குருஜியின் மேற்பார்வையில் நடைபெறும்.

கவுன்சிலிங் தேவைப்படுபவர்களுக்கு இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும்படி தெரியப்படுத்துங்கள். முன் பதிவு அவசியம்.

போன்: 9841402000, 9841272146
ஆல்ஃபா மைண்ட் பவர், சென்னை




சென்ற வாரம் சென்னையில் செல் ஒளி - கர்ம தோஷம் நீங்க வகுப்பில் கலந்து கொண்டேன். கர்ம தோஷத்தை நாம் எப்படி நீக்குவோம் என்று யோசித்துக் கொண்டு இருந்தேன். ஆனால் அந்த தியானத்தின் போது நம்மை விட்டு பல விஷயங்கள் நீங்குவதை நன்றாக உணர முடிந்தது. ஆச்சரியப்பட வைக்கும் வகுப்பு இது. குருஜி சொல்லிக் கொடுத்த மெட்டாஃபிஸிக்ஸ் எனக்கு உறவுகளில் மிக உதவியாக இருக்கிறது. செல் ஒளி தியானமே நமக்கு ஒரு வரப்பிசாதம் தான். **சிவகாமி**

பெங்களூரில் நடந்த அனுபந்தம் வகுப்பில் கலந்துகொண்டேன். அன்றிலிருந்து நான் அதன் ஆனந்தத்தை உணர்ந்து மகிழ்கிறேன். இது குருஜியால் வடிவமைக்கப்பட்ட முற்றிலும் மாறுபட்ட, அனைவருக்கும் பயனளிக்கும் வகுப்பாகும். எந்த பிரச்சினையாக இருந்தாலும் வீட்டிலோ, பணிசெய்யும் இடத்திலோ, எதுவாக இருப்பினும் எப்படி அந்த பிரச்சினையை சுலபமாகவும், சிறந்தமுறையிலும் கையாள்வது எனபதை குருஜி நமக்கு நான்கு தங்கமான வாக்கியங்களின் மூலம் வழிகாட்டியிருக்கிறார். குருஜி இந்த வகுப்பை மிகச் சிறந்த முறையில் வடிவமைத்துள்ளார். இந்த அற்புதமான வகுப்பை அளித்த ஸ்ரீமாதாவிற்கு நன்றி!

**ராமசெல்வி**

2016-ல் ஸ்ரீவித்யா வகுப்பில் கலந்துகொண்டேன். உண்மையாகவே என் வாழ்வில் பல நல்ல மாற்றங்களை உணர்ந்தேன். ஆன்மீகத்திலும் மிகச் சிறந்த முன்னேற்றத்தைக் காணமுடிந்தது. ஒவ்வொரு நாளும் நான் மேற்கொள்ளும் சின்ன சின்ன வேலையிலும் சரி மிகப் பெரிய விஷயமாக இருப்பினும் சரியான நேரத்தில் செய்து முடிக்க முடிகிறது. சிறந்த பலனும் காண முடிகிறது. வெவ்வேறு விதமான அதிசயங்கள் நிகழ்ந்தது. ஆரோக்கியம், படிப்பு, உறவுகள், பொருளாதாரம் எதுவாக இருப்பினும் மிக சாதுர்யமாக அதைக் கையாள முடிகிறது. குருஜியின் ஆசீர்வாதத்தால் தான் இது முடிந்தது. ஸ்ரீ குருவே நமஹ! குருஜிக்கு எனது சிரம் தாழ்ந்த நமஸ்காரத்தை தெரிவித்துக்கொள்கிறேன் – **ஈஸ்வரி**

நான் 5 வருடங்களுக்கு முன் ஸ்ரீவித்யா தவிர அனைத்து ஆல்ஃபா வகுப்பும் முடித்திருக்கிறேன். கடந்த 4 மாதங்களாக தொழில் போட்டியினால் பல விதத்தில் மனம் நொந்து இருந்தேன். பிறகு குருஜியின் பேச்சை யூடியூப்பில் கேட்டேன். பிரச்சினையை பற்றியே நினைக்காமல் அதன் தீர்வைப் பற்றி நினைக்க வேண்டும் என்று அவர் விளக்கினார். அதை ஒரு கட்டளையாக எடுத்துக் கொண்டேன். தியானம் செய்தேன். உண்மையாக சொல்கிறேன். எனக்கு தீர்வு கிடைத்துவிட்டது. ஆல்ஃபாவின் உதவியுடன் பிரச்சினை தீர்ந்துவிட்டது. குருஜியிடமிருந்து வந்த ஒரு வார்த்தை எனது வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தையே கொடுத்துவிட்டது. தயவு செய்து நீங்கள் எல்லோரும் ஆல்ஃபா தியானம் செய்யுங்கள்.

**மகேஷ், மதுரை**

*AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow Alpha Siddhas. Not connected yet? Send us a whatsapp message on* ***+919884555173*** *to get connected*

I attended Cell Glow – Karma Dosha removal class last week. I was wondering how we will remove the karma dosha. But, during the meditation I could actually feel so much being released. Really, it was an amazing class. The Metaphysics Guruji teaches is helping me a lot in my relationships. Cell Glow meditation itself is a real boon for us. Thanks Guruji!

**Sivagami, Chennai**

I attended Anubandham meditation at Bangalore. From that day till now I am enjoying the joy of contentment. This is the ultimate meditation designed by our Guruji which is very useful for all of us. Whatever may be the problem at office or family members, I am able to handle them in a better way than earlier with 4 golden words given by guruji. The way Guruji has designed meditation for this class is amazing with theory. Thanks Srimatha for designing this wonderful meditation - **Ramaselvi Prabhu**

After attending Srividhya in 2016 really there were lots & lots of changes in my life. There was a tremendous improvement in spirituality. So many wonders are happening each & everyday, from simple matter to bigger plans. Whatever I plan, I am able to properly execute it at the fixed time, and the results are very fruitful whether it is regarding health, education, money, relationships, I am able to handle diplomatically. I am empowered.I am blessed. Sri Guruve Namaha, I bow my head and convey my Namaskarams to our SRIMATHA -

**Eswari**

I started Alpha 5 years back and have done all the classes except Srividya. The last 4 months i was too much troubled by problems in business because of competitor. I was very disturbed. Then I saw Guruji's talk on YouTube. Guruji explained that we must not focus on the problem but the solution. I took that as a command and meditated and really I am telling you. I got the solution. Now with Alpha problem solved. Everything is peaceful. One word from Guru has changed so much for me. Pl all of you meditate regularly. **Magesh, Madurai**

## Alpha Mind Power on YouTube!

We are now uploading Guruji's speeches in YouTube.
Check out our videos and subscribe and click the bell to be notified as soon as we post.

## யூடியூப்பில் ஆல்ஃபா மைண்ட் பவர்!

குருஜியின் வீடியோக்களை யூடியூப்பில் பதிவேற்றம் செய்து வருகிறோம். அவற்றை பாருங்கள். உடனடியாக தெரிந்து கொள்ள ஸப்ஸ்க்ரைப் செய்து பெல் பட்டனை க்ளிக் செய்யவும்

### ANNOUNCEMENT

**'KELAI MANAME'**
GURUJI'S PROGRAM ON POTHIGAI TV !
7.15 am Monday to Friday
You can also watch from mobile app **'DD POTHIGAI LIVE'**

---

### அறிவிப்பு

**'கேளாய் மனமே'**

பொதிகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 7.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை

மொபைல் ஆப் **'DD POTHIGAI LIVE'** மூலமும் காணலாம்.

### ALPHA MIND POWER - MOBILE APP

Download the app and register. Basic level online class and all our meditations are available. You can order and download in the App **ALPHA MIND POWER**

### ஆல்ஃபா மைண்ட் பவர் - மொபைல் ஆப்

**ALPHA MIND POWER** மொபைல் ஆப் பதிவிரக்கம் செய்து கொள்ளுங்கள். அடிப்படை ஆல்ஃபா தியானம் ஆன்லைன் வகுப்பு மற்றும் நமது மற்ற தியானங்களை அதில் பதிவிரக்கம் செய்து கொள்ளலாம்.

# WORKSHOP SHEDULE

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Delhi (English) | **CELL GLOW - KARMA DOSHAM REMOVAL ANUBANDHAM** | 06/07/2019<br>07/07/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | The Lalit, Barakhamba Avenue, Connaught Place,New Delhi. |
| Coimbatore (Tamil) | **SANJEEVANI ALPHA LEVEL-1** | 20/07/2019<br>21/07/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent, 708, Avinashi Road, Coimbatore |
| Bangalore (English) | **KUNDALINI MAHASHAKTHI ALPHA LEVEL-1** | 27/07/2019<br>28/07/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel IV Sanctum, No.33, 5th Main, Sheshadri Road, Near Anand Rao Circle, Bangalore |
| Trichy (Tamil) | **SRIVIDYA AMRUT SIDDHI** | 03/08/2019<br>04/08/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency, McDonalds Road, Trichy |
| Chennai (Tamil) | **KUNDALINI MAHASHAKTHI ALPHA LEVEL-1** | 17/08/2019<br>18/08/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T Nagar, Chennai |
| Rishikesh Yatra | **BADRINATH SHANTAGNI WORKSHOP** | 23/09/2019 to 25/09/2019<br>27/09/2019 to 01/10/2019 | | | Swami Dayananda Ashram, Purani Jhadi, Muni-Ki-Reti - 249137 Rishikesh (U.K), |


*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"



***Dr. Vijayalakshmi Panthaiyan***
***ALPHA MIND POWER***
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai - 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841272146*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*


***PRINTED MATERIAL***